T-Supdt copy

சுருக்கம்

நிலம்–வீட்டுமனை ஒப்படை–அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருப்போரின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத்திட்டம் 30.9.2008 உடன் முடிவடைவது – மேலும் ஒரு வருட காலத்திற்கு (30.9.2009 வரை) நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய்த்(நி.மு.1(2)துறை

அரசாணை (நிலை) எண்: 579 நாள்:3.10.2008.

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.854 வருவாய்த்துறை, நாள். 30.12.06
2. அரசாணை (நிலை) எண். 498 வருவாய்த்துறை, நாள் 5.9.2007.
3. அரசாணை (2டி) எண். 711 வருவாய்த்துறை, நாள் 30.11.2007.
4. அரசாணை (நிலை) எண். 34 வருவாய்த்துறை, நாள் 23.1.2008.
5. அரசாணை (நிலை) எண் 241 வருவாய்த்துறை, நாள் 9.5.2008.
6. அரசு கடித எண்.39161/நி.மு.1(2)/08–1 வருவாய்த்துறை, நாள் 23.9.08.
7. முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடிதஎண். எப்1/27403/06 நாள் 26.9.08.

******

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களை பெற்று, ஆக்கிரமிப்பாளர்களின் தகுதியின் அடிப்படையில், அவ்வாக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்கும் ஒருமுறை சிறப்புத்திட்டம் அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்திட்டம் சனவரி 2007 முதல் ஆறுமாத காலத்திற்கு மட்டும் நடைமுறைப்படுத்தப்படும் என ஆணையிடப்பட்டது.

2. இந்த ஒருமுறை சிறப்புத்திட்டத்தை இதர பிற அறிவுரைகளுடன் அவ்வப்போது நீட்டிப்பு செய்து பார்வை இரண்டு, மூன்று மற்றும் நான்கில் கண்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டு மேலும் இச்சிறப்புத் திட்டத்தின் கீழ் மேலும் அதிக அளவில் மக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக மேலே பார்வை 5–இல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் இத்திட்டம் 30.9.2008 வரை நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

3. இச்சிறப்புத் திட்டத்தினை மேலும் நீட்டிப்பு செய்ய வேண்டிய அவசியம் குறித்து ஆய்வு செய்து, மேலே பார்வை 7–ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், ஏப்ரல் 2007–ஆம் ஆண்டைய கணக்கெடுப்பின்படி அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை 6,14,384 என்றும், அவற்றுள் 15.9.2008 வரை 1,93,282 ஆக்கிரமிப்புகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் 4.21 இலட்சம் ஆக்கிரமிப்புகள் மீதமுள்ளன என்றும் ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை 3.34 இலட்சம் (2.67 இலட்சம் நீர்நிலைப் புறம்போக்குகளிலும் மற்றும் 0.67 இலட்சம் நெடுஞ்சாலை புறம்போக்குகளிலும்

Verified Record Note

-100-

உள்ளவை) என்றும், ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை தவிர ஏனையவை நகரப்பகுதிகள், நகராட்சிப் பகுதிகள் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளிலுள்ளவை என்றும், இது குறித்து நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் இராமநாதபுர மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட அரசிதழில் விலக்கல் அறிக்கையை (Withdrawal Notification) வெளியிடுவதற்கு செயற்குறிப்புகள அரசு அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அது வெளியான பின்பு தான் பஞ்சாயத்து வசமுள்ள நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்ய இயலும் என்பதால், அதற்கு இன்னும் சிறிது காலம் ஆகும் என தெரிவித்துள்ளனர் என முதன்மை செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. மேலும் விடுபட்ட வரன்முறை இனங்களை வரன்முறைப்படுத்தவும் குறிப்பாக, மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் விதமாகவும், மேலே பார்வை 5–இல் படிக்கப்பட்ட அரசாணையில் 30.9.2008 வரை இறுதியாக நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்ட இந்த ஒருமுறை சிறப்புத்திட்டத்தின் காலத்தை மேலும் ஒருவருட காலத்திற்கு (30.9.2009 வரை) நீட்டிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணைப்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அம்புஜ் சர்மா
முதன்மை செயலாளர்

பெறுநர்:
முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

நகல்:
அனைத்து துறை செயலாளர்கள், தலைமைச்செயலகம், சென்னை–9.
பாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த்துறை முதன்மை செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 31/10/08

Verified RedFSCite